அநாதிநமே.

# பேரின்பக்காதல்.

இஃது

இராயபுரம்

தே. மரி. ஞானப்பிரகாசசுவாமிகள்

உத்தாரப்படி

ஐ. அப்பாத்துரை பிள்ளையால்

சென்னைமாநகரில்

அச்சிடப்பட்டபிரதியை

கொழும்பில்

மணிப்பிச்சைக்காறன் மசவலதியாம்பிள்ளையால்

அச்சிடலானது.

COLOMBO

JOHN. P P TAVARAYAPULLAY.

1889.

Digitized by Roja Muthiah Research Library

Digitized by Roja Muthiah Research Library

# பேரின்பக்காதல்.

## காப்பு விருத்தம்.

கொற்றமாமன்னருக்குறிய கோமகன் கோத்திரகன் ஙி
பெற்றபாலகனுரு [illegible] பேரின்பக்காதல்பாட க்
கற்றவாகமத்தைக்கன்னனங் கருங்கடன்மீனுக்கோத ச்
சுற்றுளோர்வியக்குஞ் சந்தந்தோனிதாடுணைக்கொள்வா மே

## காதல்

கார்கொண்டநீலக் கலோலக்கடலுடுத்த
பார்கொண்டயாவும், படைத்தழித்துக்காத்தபிரான்

ஆதியந்தமில்லா தநாதியபாயாநந்தச்
சோதிவடிவாகித், தோன்றுஞ் சுயசுரூபன் ௨

மட்டில்லா நன்மை, வடிவாய் மனோவாக்குக்
கெட்டில்லான்றுறு, யிருக்கின்ற வேகாந்தன் ௩

மாயாச்சுகரோக, வஞ்சமனக்கஞ்சமிசைத்
தோயா தருள்சுரக்குந், தூக்குந் துணைத்தாளன் ௪

A

எங்கைச் சரீரமில்லா, னேகநிறித்துவமாந்
தங்கைச்சருவ, தயாபசருவேசன் ரு

நித்தியனின்றும், நிமலநிராகாரன்
சத்தியச்சுரூபன், சகலவுபகாரன் சு

வேடத்தாதர்ப்பணத்தால்வெண்ணீற்ருலெக்கியத்தால்
தேடத்தான்கிட்டாத, தேவதரிசனத்தான் எ

ஆறெழுத்தாயெட்டெழுத்தா, யைந்தெழுத்தாய் மூன்
றெழுத்தாய் வேறெழுத்தாயோதும, விதக்குள்ளடங்
காதான் ... ... ... அ

ஓங்காரரீங்கார, வுள்ளெழுத்தோடுட்கலந்து
நீங்காச்சகள, நிகழ்த்துமன நிலலாதான் கூ

சாற்றும் விலாசசபைச், சம்மனசோர்தாமபரவிப்
போற்றுந்தனிமுதலாய்ப், பூதலமெல்லாம்புரப்போன்

அஞ்ஞானமானவிரு, ளந்தகாரந்துறக்கு
மெஞ்ஞானச்சோதி, விளக்காய்விளங்குபிரான் ம௧

பாவப்பழவகையின், பற்றறுக்கப்பார்மனுவைத்
தேவத்துவத்தோடு, சேகரித்ததெய்வீகன் ம௨

---

## தேவவாரம்.

பாரின்பத்துன்பமெனும், பற்றில்லாக் கர்த்தனுக்குப்
பேரின்பக்காதலொன்று, பேருலகில்யான்பாட ம௩

Digitized by Roja Muthiah Research Library

ஞானநிறைநன்மதியு, நம்பினவர்க்காருயிருந்
தானமளித்திலகுஞ், சாந்தவனேமுன்னடவாய் ௰௪

ஆயேநிலவெறிக்கு, மம்புலிமேல்வைத்தபதத்
தாயேயெனக்குத், தமிழ்வாக்குத்தந்தருளவாய் ௰௫

நன்னாவழியாமெஞ், ஞானியேநானிலத்தி
லென்னாவிலேவந், திருந்தெனக்குவாக்கருளே ௰௬

ஆர்க்குமளவுபடா, வற்புதனுக்கிபபுவிமேற்
சேர்க்கும் பனுவலியான், செப்பத்துணிந்தவெல்லாம்

முன்னமொருமாதவற்கு, முந்நீர்வாயோர்சிறுவன்
சொன்னமொழிதானெனக்குச், சொல்லத்தகவாமே

பாவிருக்கவேதப், பரிவிருக்கப்பாடவொரு
நாவிருக்கவேவிழலாய், நானிருக்கலாகாதே ௰௯

என்றேயடியே, னியம்புகின்றபுன்றமிழை
நன்றேயெனமதிப்பார், நன்னாவலர்தாமே ௨௰

---

## தசாங்கம்.

மண்ணோர்க்கதிபதியா, மாவேந்தர்மூவரொடு
விண்ணோர்பணிந்துதொழும், வெலலைமகமேருவினான்

ஆனவருளப்பர்திரு, வங்கையிலேஞானஸ்
நானமதுபெற்றிடுஞ்சோர், தானென்னுந்தண்ணதியான்

அந்தமணப்பந்தலிலே, யாறுகுடந்தண்ணீரைக்
கந்தமதுவாக்குங், கலிலேயநன்னாடன் ௨௩

Digitized by Roja Muthiah Research Library

தேபாதபேரின்பஞ், செல்வமொடுமன்னர்குலத்
தாயோர்வணர்க்குந், தலைமைக்குருசரைசரான் ௨௪

உன்னுஞ்செருசலேயி, லொட்டோடலங்கார
மன்னிவரும் † நீச, வாகனமாம்வாரணத்தான் ௨௫

ஆகத்திற்றன்றலையைத், தன்றுதயின்றேன்காண
மேகத்திற்றேன்றுமொரு, வெள்ளைவயப்பரியான்

காண்டோறுங்காந்துமழற், கண்ணலகைப்பசமுற்றுக்
கூண்டோடும்வெற்றிக், குருசலங்காரக்கொடியோன்

ஆவிக்குநன்குபெற, வாசமிழ்ந்தன்புடையோர்
சேவிக்குஞானத், தியானசெபமாலையினன் ௨௮

செத்தவர்களெல்லோருஞ், சீவித்தெழுகவெனச்
சத்தமெழச்சம்மனசோர, சாற்றுந்தொனிமுரசான்

பாருந்தீக்காயப், பரப்பும்பகிரண்டத்
தாருந்தலைவணங்கி, யாசரிக்குமாணையினன் ௩௰

## காதலன் புகழ்ச்சி.

ஞானகரன்கருணை, சாதனரூபன்
மேகானன்றவிது, குலராசக்கன்னிமகன் ௩௧

மாகம்படிபுரக்கு, மானிடர்க்குமோக்ஷமரு
ளேகனியேசுநச, ரென்னுந்திருநாமன் ௩௨

† நீசவாகனம - கோவேறுகழுதை.

## தாழ்ச்சி.

எங்கடவுளெங்கே, யெனமெய்ப்பணைத்தெய்வியங்க
அங்கொருவனோ பொறிகுமை, யாசனத்தேயிருக்கும்

காளானவாரியிலே, கானிலத்திலேயலைக்
காணாணபாவி, யறிவுக்குறிகினன் ௧௪

பொய்யுலகவாழ்வுமனுப், போகசுகபாக்கியத்தை
மெய்யெனவேவசப்பி, விரும்புமிழவினேன் ௧௫

தேடுந்திரவியத்தின், செல்வத்தின்சிந்தனைவந்து
வாடுஞ்சுருதீ, மயங்குமதியீனன் ௧௬

நல்லோரறிவுரைக்க, நன்னெனக்கொண்டாங்கேர்ந்து
சொல்லாரிவொழுகாத, துராசாரதாச்சேனன் ௧௭

ஞானவத்தானெனன், றகம்பிரமமிஞ்சியரம்
பேணுந்திறமதியாப், பிதற்றமிற்பதை ௧௮

மாலம்பன்வம்புரைக்க, மற்றோரெதிருரைக்கக்
கோவமபொருமற், கொதிககுரகுணவினன் ௧௯

உய்யுமொருசங்கி, யொறுத்தண்ணுத்தாணவபிறு
தெய்வமெனவூடடுங், தினப்போசனபரியன் ௨௰

வேம்பிற்றவத்தையற. வேண்டாமெனவெறுத்துச்
சோமபிச்சரீரச், சுகந்தேடுந்துச்சாரி ௨௧

நாட்டம்வெரிதுகுல, நாரியார்மாமயல்கொள்
கூட்டங்களோடுறவு, கெண்டகுளாசாரன் ௨௨

Digitized by Roja Muthiah Research Library

அந்நியர்தங்கற்புடையோ,ராயிழையா ரென்றுரைக்குங்
கந்நியரையேவிரும்புங். காமாதுரக்களியன் ௪௩

நல்லோர்சமூகங்கூடி, நாதனடிதெண்டனிடச்
செல்லுந்தினகரமாந், தேவாலயந்தனிலே ௪௪

## விசுவாசம்

சென்றேன்பரஞ்சுடரைத் தெண்டனிட்டேன் கைகுவி [த்தா
நின்றேனெனையாளும், நித்தனெனுங்கர்த்தாவின் ௪௫

ஆணிதைத்த செங்கரமும் பொருக்கப்பதமும்
பூணுமுடிமுள்ளாற், புனைந்ததிருத்தலையும் ௪௬

துன்னும்பெரும்பாவி, சோடிட்டகைபதறற்
கன்னத்தடிக்கக். கலங்கச்சிவந்தகண்ணும் ௪௭

பிச்சுக்கலந்த, புளித்தமதுவிரசம
னைவச்சுச்சுவைபார்த்த, வனனமணிவாயும் ௪௮

மாறியெதிரடர்ந்து, மானமற்றவன்பாவிக்
காறியுமிழ்நீர்ச், கறையடர்ந்தமென்முகமும் ௪௯

கற்றூணிற்சேர்த்திறுகக், கட்டியடிபட்டவடு
வுற்றேயொழுகு. முதிரக்கறையுடலும் ௫௰

பாங்கினுடற்கனவிரு, பட்டப்பகிந்தாறுத்தத்
தாங்கிச்சிலுவை, தன்னைச்சுமந்தவொப்புயரும் ௫௧

Digitized by Roja Muthiah Research Library

கண்டேன்கரைந்துமனக், கலங்கிக்கண்ணாறுவி
விண்டேனொழுகா, வினையேனுமெலிந்தேனே ௫௨

## மனஸ்தாபம்.

என்னைப்படைத்தவரே, ஏகபரஞ்சோதி
நின்னைத்தரையிலிந்த, நிடூரஞ்செய்தவரார் ௫௩

செய்யாதபாவமெல்லாஞ், செய்தவடியேனிருக்க
ஐயாநீரிந்த, வருங்கொலைக்குள்ளாவானேன் ௫௪

வேண்டியெனைப்பேய்க்கடிமை, மீளாச்சிறைமீட்க
ஆண்டவரேநீரிவ, கடிமைப்படுவானேன் ௫௫

விண்ணிலரிய, வெகுமானநானடைய
மண்ணிலுமக்கிந்தவவ, மானம்வருவானேன் ௫௬

பற்றுணவமதியேன், பாவவினைக்கட்டவிழ்க்கச்
சற்றாணிலையாநீர், கட்டுண்டுநிற்பானேன் ௫௭

பாவியடியேன்சுமக்கும், பாவச்சுமையிறக்கத்
தேவரீரிந்தச், சிலுவைசுமப்பானேன ௫௮

பண்ணுகின்றபாவப், பகையேனுயிர்பிழைக்க
மண்ணுலகினீர்தான், மரணமடைவானேன் ௫௯

ஆனாலும்பாவியென்னை, யாளவென்றேயையாநீர்
தானேமனம்பொருந்திச், சம்மதித்துவிட்டீரே ௬௰

## மனஸ்தாப வாக்கியம்.

இந்தவன்றியெல்லா, மியானறியாதும்முடைய
சிந்தைக்கருவருக்குந், தீவினையைச்செய்தேனே ௬௧

என்னைச்சேர்த்தாவே. என்கோவேயும்மைமுழுக்
கன்னெஞ்சர்தங்கையிற், காட்டிக்கொடுத்தேனே

சன்னத்தடித்தேனே, கற்றூணிற்சேர்த்தேனே
சென்னிதனின் முண்முடியைத், தெற்றியிடச் செய்தே
னே ௬௩

நிந்தைபலசொன்னேனே, நீண்டசிலுவையில்வைத்
தந்தமுறுங்கைகாலி, லாணியறைந்தேனே ௬௪

எல்லாமடியே, னிருநிலத்தில்யான்புரிந்த
பொல்லாதனவே, புரிகின்றதித்தனையும் ௬௫

ஆளத்தனைபுரிந்த, வன்மையறியாதுபல
காளுக்குநாள்புரிந்தா, னுமக்குநல்லவனோ ௬௬

எல்லாத்துயருநினைந், தென்மனதுதானுருகாக்
கல்லாயிருந்தாற், கரையேறப்போவேனோ ௬௭

நன்முகத்தைப்பார்க்கவுள், நாணியுறக்கவிழ்ந்தா
லென்முகத்தைக்கண்டா, லிரக்கமுமக்குண்டாமோ

சிந்தையுடன்பிரேமக்காச், செத்திருச்சாவுகண்டா
லிந்தவுலகினிலே, யான்சுகிக்கநீதியுண்டோ ௬௯

நாதன்மனமகிழ்ந்து, நாடியவரணிந்த
வேதனையிலின்பம், வெறுத்திகழுநியாயமுண்டோ ௭௰

நிர்ப்பந்தத்தோடெமக்காய், நீர்சிலுவைமேலிருக்க
அற்பன்றனக்குலக, வாசைவரமாட்டாதே ௭௧

பாவிமனத்தச்சாகப், பாடுகளெல்லாம்பதிந்தாற்
பூவுலகினின்பம், புணரப்பொருந்தாதே ௭௨

தெய்வீகச்சோதி, திருச்சாவையாநினைந்தா
லய்யோவெனக்காண்மை, யாசைவரமாட்டாதே ௭௩

மாசில்லான்பட்டவவ, மானமதைச்சிந்தைசெய்தா
லாசையுலகிலெனக், க்கங்காரம்வாராதே ௭௪

பாவிகளுக்காகவவர், பட்டிருப்பாடுகண்டாற்
சீவனளவும்பவுக்தைச், செய்யமனஞ்செல்லாதே ௭௫

கர்த்தன்பொறுத்தபிழைக், கண்டாலருந்துயர
மெத்தனைவந்தாலுமதற், கீடாகத்தோன்றாதே ௭௬

---

## மனஸ்தாபயோசனை.

இன்றைக்கோநாளைக்கோ வெப்போதோவிப்போதோ
வென்றைக்கோசாவேன், றிலக்கமறியேனே ௭௭

ஆங்காலம்புண்ணியத்தை, யாசையுற்றுச்செய்யாமற்
சாங்காலஞ்செய்யவொரு, சாமார்த்தியமுள்ளதோ ௭௮

நன்றாயிருக்கையிலே, நன்மைசெய்யமாட்டாமல்
நின்றார்கிடந்தார், நிலைநிற்பாராவாரோ ௭௯



Digitized by Roja Muthiah Research Library

வாலிபத்தினல்ல, வழிநடவாதாருயிர்போங்
காலம்பரனானைக், காரியத்தைக்காண்பாரோ ௮ம

பாரப்பிணிமருந்தும், பத்தியமுங்கொள்ளுகைபி
லாருக்கியலயா, மருந்தவசுமண்ணுதற்கே ௮க

தந்தையழப்பிள்ளையழத், தயாரழப்பெண்டிரழ
வந்தசமயத், தறம்புரிவதற்காமோ ௮உ

நாளைக்குநாளைக்கென்றே,நசையடர்ந்துகொண்டபின்பு
மாளுவதையெண்ணி, மயக்கமறக்காலமுண்டோ ௮௩

ஈதெல்லாமாராய்ந், திருந்தாலுமென்மனதிற்
றீதெல்லாஞ்செந்தேனாத், தித்திக்குமென்றழன்றேன்

---

## பிரதிக்ஞை.

வேண்டாமுலகவெரு, மானமதைபின்னதெனக்
கண்டாயினிமேற், கருத்தையதிலவையாதே ௮௫

இவ்வுலகவாழ்வழிந்து, வின்பமெல்லாநீர்க்குமிழி
அவவளவேயாகுமென, வாசையதில்வையாதே ௮௬

இனிமேலும்யானுமக், கேற்கடப்பேனடியேன்
இனிமேலுலகபவத், தின்பசுகம்வேண்டேனே ௮எ

இதங்வுகைசொல்லி, யிரந்தழுதுகொண்டிறைவ
னந்தமுறுங்கோயி, லமைந்தசனங்களொடு ௮௮

## பத்தி.

மீண்டேயெமைப்படைத்த, வேதபரன்பாடுகளாற்
பூண்டதுயரம், றொறுக்கமுடியாதே ௮௯

ஆயபுவிமீதிலெம, தாண்டவனார்பட்டிருக்
காயமெல்லாமிங்கென். கருத்திற்றழும்பாமே ௯௰

துட்டன்படிபுரக்குந், தூயோன்றிருத்தலையி
லிட்டமுளைமுள்ளென், னிருதயத்திற்றைத்திடுமே

காணரியகர்த்தன், கரங்காற்றுளைத்தவிருப்
பாணிமுளையென்ற, னகத்தைத்துளைத்திடுமே ௯௨

தேட்டமுறவெங்கோன், றிருவிலாவைத்திறந்த
ஈட்டிமுனையிங்கென், னிருதயத்திற்பாய்ந்திடுமே ௯௩

அங்கெனதுகர்த்த, னநுபவித்ததுன்பமெல்லா
மிங்கென்னுளத்தி, லிருந்தேயுருக்கிடுமே ௯௪

பாவித்தேயும்முடைய, பாட்டிலொருபங்கெனக்குத்
தாவித்தால்மீண்டுந், தரக்கூடாதென்பீரோ ௯௫

பேய்க்கடிமையானவென்னைப். பேருலகில்மீட்டுமக்க
ளாக்கியின்னமவ்வலகைக், காளாய்க்கொடுப்பீரோ

நீரெமக்காய்ப்பட்டபல, நிந்தைகளுக்கையாவிப்
பாருலகிலென்னுடைய, பாதகமோரீடமோ ௯௭

சொல்லுலகோர்செய்தகன்மதோஷமனைத்துஞ்சகிக்கு
மெல்லையில்லாநும்பொறைக்கிங், கென்குற்றமாபெரி
தோ ௯௮

ஆதரவோடென்னை, யருகணைக்கக் கைவிரித்த
யோதேயென்பாவம், பொறுக்கவரிதென்பீரோ ௯௯

எல்லாருகாளுமுமக், கேவல்செய்யநானொருவன்
பொலலாதவனைகப், போகப்பொருந்துமதோ ௱

வாழ்வுலகினீரெமக்காய், வந்ததுமெய்யாதலினற்
பாழ்நரகில்யான்போகப், பார்த்திருக்கமாட்டீரே. ௱௧

சாரவநம்பாவியென்னைத், தானேநீர்தன்ளுதற்குக்
காரிரும்பினணிதைத்த, கையிரண்டுங்கூடாதே ௱௨

செய்யச்சிலுவைதனிற், செங்காலசரத்தாணி
யெய்யவறைந்துவைத்தா, லென்னைவிடவேபோ-
வீர் ௱௩
தேவரீர்சிந்துந், திருவிரத்தமத்தனையும்
பாவிகளுக்கன்றோ? வென்பங்குவிடுவேனோ? ௱௪

ஆனாலுமென்முகம்பார்த், தாண்டவனேயாளுமெ
னானொரனவுரைக்க, நாவுண்டோநாயகமே ௱௫

என்பவத்தைப்பொல்லாப்பை, யிப்புவியிற்பாராம
லன்புடனீர்பட்டதுய, ரத்தனையுமேபாரும ௱௬

உம்மமைச்சிலுவையில்வைத், தோர்க்காயிரந்திருச்
செம்மைசகிருபைத், திருவுளமென்மேற்செலுத்தும

உள்ளமுறவையா, உமதுவலப்பாலிருந்த
கள்ளன்முகம் பார்த்தகடைக், கண்கொண்டெனைப்பா
ரும ௱௮

பாவியென்மேலாசைகொண்ட, பாசத்தீ மிஞ்சியதாற்
றுவிநீர்தாகமென்ற, தாதைமனமேசெலுத்தும் ௱௯

தேவபிணைநீரிருக்கத், தேவகன்னியென்றனிடம்
ஆவிபிணையாககுவித்த, வன்போடணைப்பாரும் ௱௰

பாரேதரைநனையப், பாயுங்கிருவிரத்தத்
தாரேதுளியென், னுளத்திற்றெளித்தருளும் ௱௰௧

கர்த்தாவேபாவியென்னைச், கைவிடாதேகருணை
வைத்தேயெனைநீர், வழியடிமையாயாளும் ௱௰௨

---

நம்பிக்கை.

அற்பசுகத்தை, யறமறந்தாலெப்போதுந்
துப்புரவாமோட்ச, சுகக்கிரகஞ்சேர்வேனே ௱௰௩

ஐய்ந்தவழிவோர், டகம்பிரமம்விட்டகன்றால்
வாய்ந்தபரலோக, மாட்சிபெறுவேனே ௱௰௪

தன்மந்தவசுமோரு, சந்திதவறுதிருந்தா
லென்னுயிரைவானி, லினிபபாறவைப்பேனே ௱௰௫

மோகக்கலகவிழி, மொய்குழலாராசையற்றால்
மாகசுகபாக்கியத்தில், மாறாதிருப்பேனே ௱௰௬

என்றுற்றவுலகா, விருநிலத்தைப்பேயுடலை
வென்றுற்பரலோக, வெற்றிபெறுவேனே ௱௰௭

பாரின்பத்துன்பமெனும், பற்றகன்றுற்பத்தர்தொழும்
பேரின்பவீடடைந்து, பேறுபெற்றுவாழ்வேனே

புத்தியந்தகாரம்விட்டுப், புண்ணியத்திலேநடந்தால்
முத்தர்ச்சபைதிரண்ட, மோட்சத்திருப்பேனே ॥௰௯

துன்மனசம்பாவத், துணிவுமறவெறுத்தாற்
சம்மன்சோடுநவ, சங்கத்திருப்பேனே ॥௨௰

பாவவுலகத்திலுள்ள, பாக்கியத்தைக் கைநெகிழ்ந்தாற்
றேவபரன்சந்நிதியிற், செலவம்பெறுவேனே ॥௨௧

அத்தன்றனகேற்க, வம்புவியிலேநடந்தாற்
கர்த்தன்றிருப்பாதங், கண்டுகளிகூர்வேனே ॥௨௨

பத்திவிசுவாசநிலை, பண்புறுநம்பிக்கையுட
னித்தியமும்விற்றிருந்தா, னேசநிலைதப்பாமல் ॥௨௩

நித்தியத்திலுணைணறிவை, நெஞ்சமுழுக்கியென்மனதை
சுத்திகரஞ்செய்ததினாற், றேலபுவியிலேசுகமே ॥௨௪

---

## கர்த்தர் புகழ்ச்சி.

வேதனைவேதாந்த, விமலனையெய்ஞ்ஞான
நாதனைவாழ்த்தி, நமஸ்கரித்துநாளவிடுவோம் ॥௨௫

காரணனைச்சோதிக், கடவுளென்னுங்கர்த்தாவை
யாரணனைவாழ்த்தி, யநவரதமுந்தொழுவோம் ॥௨௬

மண்ணவர்க்குஞான, வழிகாட்டவந்தருளும்
விண்ணவனைவாழ்த்தி, விருப்பமுறவேயிருப்போம்

சத்தியத்தைப்போதித்த, சற்குருவைக்கத்தாவை
நித்தியமுமபோற்றியிந்த, நீணிலத்திலேயிருப்போம்

Digitized by Roja Muthiah Research Library

தன்னிலையைத்தப்பித், தவிக்குமெனைத்தேடிவந்தே
யுன்னியருகணைத்த, வும்பர்கோனைத்தொழுவோம

என்னுயிர்க்காய்த் தன்னுயிரை, யேகபரன்கையளித்த
மன்னுயிரின்றன்மகனை, வாழ்த்திநமஸ்கரிப்போம்

ஆத்துமசரீரமதை, யன்புதிவ்வியபோசனமாய்ச்
சேர்த்துநமக்களித்த, தேவபலியைத்தொழுவோம்

---

## தேவமாதாவின் புகழ்ச்சி.

இப்படியேயென்னை, யிரட்சித்தவாண்டவனை
யெப்போதும்போற்றி, யிறைஞ்சுவதுமல்லாமல்

மற்றுநிகரொவ்வா, மறைப்பொருளைவயிற்றிற்
பெற்றதிருத்தாயான, பேரின்பராக்கினியை ௱௬௫

உத்தமியைப்பேரின்ப, வோவியத்தைமெய்ஞ்ஞானச்
சித்திரத்தைமேலோகர், தேடுந்திரவியத்தை ௱௬௬

மாதர்க்கரசை, மனுகுலத்தோர்பாக்கியத்தைச்
சோதிகிரணநிறை, சொர்னமயவாலயத்தை

மேலோகர்வாழ்வை, விரத்தர்சிரோமணியைப்
பூலோகமாதவத்தோர், புண்ணியத்தின்பூஷணத்தை

நன்மைச்சலநிதியை, நம்பினவர்க்காதரவைத்
தன்மக்கொழுந்து, தழைத்துவளர்தண்டலையை ௱௬௭

ஞானமணநாறுமலர், நந்தவனத்திரசப்
பானப்பசுமைப, பரிமளிக்குஞ்செந்தேனை ௱௬௮

Digitized by Roja Muthiah Research Library

வேதாகமத்தோரும், விண்ணோருங்கொண்டாடு
மாதாவையெம்மை, வளர்த்தருளுந்தாயாரை ௱௩௯

ஒன்றானகர்த்த, னொருவனின்சந்நிதியில்
மன்றாடியெங்கள், மயக்கந்தவிர்ப்பவளை ௱௪௰

தாரித்திரத்தாற், சலிப்பாலரும்பிணியாற்
டாரிற்றுயர்வாரைப், படசிகரிப்பவளை ௱௪௧

எத்துணையுமற்றே, யிணையிழந்தபாவிகளைச்
சத்துவத்தோடாதரித்துத், தன்னடிமை கொள்பவளை

தன்பேரிற்பத்தி, தவறாதபாவிகளை
யன்போடுதற்காத்த, தருகளைக்குமம்மாளை ௱௪௩

நம்பியெந்நாளு, நமக்கிவளேதஞ்சமென
அம்புவியிற்சிந்தித், தகவாரதமுந்தொழுவோம் ௱௪௪

## திருச்சபைப் புகழ்ச்சி.

வாழிதிருச்சபையு, மங்காதசத்தியமும்
ஆழிசூழ்ந்த, வவனிதனிலேவாழி

சற்குருக்கள்மெய்ஞ்ஞான, சாஸ்திரிக ணற்சபையும்
பொற்புறையுமவேதப, புரோகிதரெல்லாம்வாழி

வாலவிரத்தர், மடமாதர்கன்னியர்கள்
சாலத்துறவோர், தவசிகளுமேவாழி ௱௪௭

பூசைசபைநிறைந்த, பூபாலராயர்பல
தேசத்திலுள்ள, திருச்சபையெல்லாம்வாழி ௱௪௮

Digitized by Roja Muthiah Research Library

மெய்ச்சபையிலுள்ள, விசுவாசிகள்யாரு
மிச்செகத்திலெப்போது, மெப்போதுமேவு"ழி ௱௪௯

பஞ்சம்படைநோய்கள், மாருல்கிலவாராம
னெஞ்சிற்கவலையற்று, நீடூழிவாழ்ந்திருப்போம் ௱௫௰

முற்றிற்று.

நூலாசிரியர் பெயர்.

பேரின்பக்காதலெனும், பேசரியநூலளவு
சீரின்பக்கண்ணி, சிறந்தநூற்றைம்பதுவே
சிந்தாகுலமிதந்து, தேவனமேற்பதுகொண்ட
அந்தோனிக்குட்டியெனும், அண்ணாவிபாடியதே

Digitized by Roja Muthiah Research Library